©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 13]

சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 4, 2012
பங்குனி 22, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 1/2012.**

***1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1) – ஆம் உட்பிரிவில் ''முப்பத்து ஐந்து ஆண்டுகள் எட்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''முப்பத்து ஆறு ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 2/2012.**

***1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XX/1951. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 3–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவில், (b) எனும் கூறில், ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவில் (4)–ஆம் உட்பிரிவில்,– 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (a) எனும் கூறில் (ii) எனும் உட்கூறில் ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (b) எனும் கூறில் (ii) எனும் உட்கூறில் ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் 6–A எனும் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், (ii) எனும் கூறில், ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 6–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (1–AA) எனும் உட்பிரிவில் ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 12–B எனும் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் ‘‘திங்களொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘திங்களொன்றுக்குப் பன்னிரெண்டாயிரம் ரூபாய்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 12–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 3/2012.**

***2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2012—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 2. 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 41—ஆம் பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 41—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"**41. வசூலிக்கப்பட்ட வரியை இழத்தல்.**—இச்சட்டத்தின்படி குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பிற்குக் குறைவான அந்த ஆண்டுக்கான விற்பனைத் தொகையைக் கொண்ட நபர் அல்லது பதிவுபெற்ற வணிகர் எவரும் வரி என்ற வகையிலோ அல்லது வரி என்பதாகப் புலப்படுகின்ற வகையிலோ தொகை எதனையும் வசூலித்தால் அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து அதன் நேரிணையான கொள்முதல் மீதான தகுந்த உள்ளீட்டு வரிவரவுக் கோரிக்கை ஏதேனுமிருப்பின் அதனைக் கழித்த பின்னருள்ள தொகையை அரசுக்குச் செலுத்தி அதை இழத்தல் வேண்டும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 4/2012.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** **(1)** இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தில் **6**–ஆம் பிரிவில், **(1)**–ஆம் உட்பிரிவில், (iii)–ஆம் இனத்தில் ''நூற்றுக்கு நான்கு விழுக்காடு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நூற்றுக்கு ஐந்து விழுக்காடு'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 6–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 7–ஆம் பிரிவில், **(1)**–ஆம் உட்பிரிவில்,– 7–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) (a) எனும் கூறில் ''நூற்றுக்கு பன்னிரண்டரை விழுக்காடு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நூற்றுக்கு பதினான்கரை விழுக்காடு'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (b) எனும் கூறில் ''நூற்றுக்கு நான்கு விழுக்காடு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நூற்றுக்கு ஐந்து விழுக்காடு'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில், **(1)**–ஆம் உட்பிரிவில், (iii) எனும் இனத்தில், ''நூற்றுக்கு நான்கு விழுக்காடு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நூற்றுக்கு ஐந்து விழுக்காடு'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 5/2012.**

***1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ''பத்தாண்டுகள் ஆறு மாதங்கள்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''பதினோராண்டுகள்'' எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2012.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 6/2012.**

***1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

16—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில், (C) எனும் கூறில், ''பதினோராண்டுகள்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''பதினாறாண்டுகள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லத்தக்க— தாக்குதல்.

3. முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மற்றும் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22—ஆம் நாளுக்கு முன்னரோ இச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், இச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது அத்தகைய செயல்கள் செய்யப்பட்ட அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதான அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்றே சட்டத்திற்கு இணங்கிய வகையில் அனைத்து நோக்கங்களுக்காகவும் செல்லத்தக்கவாறு எப்போதுமே செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2012.

நீக்கமும் காப்பும்.

4. (1) 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.